**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| | | | |
|---|---|---|---|
| 2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் 2-ம் நாள் திங்கள்கிழமை பிரதிவாதி தரப்பு 2-ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி உதவியாளர் திரு.சுவர்ணரத்தினக்குமார் என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | முத்துமாரி(எ) மாரிசேர்வை | தொழில் : | |
| த.பெ: | | சமயம் : | |
| கிராமம்: | | சாதி : | |
| வட்டம்: | | வயது: | |

**2.1.2024 OS No. 69/2019 பிவா.சா.2 முத்துமாரி(எ) மாரிசேர்வை ஆஜர் முதல் விசாரணை :**

நான் இந்த வழக்கில் பிரதிவாதி தரப்பு 2ஆம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்து காண்பித்து பின்பு நான் அதில் கையெழுத்து செய்துள்ளேன். பிராமண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

**7-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரிந்து கொண்டேனா என்றால் தெரியாது. பத்திரத்தில் சாட்சி கையெழுத்து போட்டதை பற்றி மட்டும்தான் சொல்லவந்துள்ளேன் என்றாலும், மற்ற விபரங்கள் எனக்கு தெரியாது என்றாலும் சரிதான். திருவேங்கடசெட்டியாருக்கு பாத்தியம் என்று நான் சொல்லியிருப்பதில் அது குறித்த ஆவணங்கள் எதையும் பார்வையிட்டேனா என்றால் அவர் அனுபவித்ததை பார்த்துள்ளேன். நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளதில் அதில் என்ன எழுதியுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் ஆளுக்கு 10 செண்ட் என்று எழுதியுள்ளது.

2. தாவா சொத்தை அறநிலையத்துறை எடுத்துக்கொண்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் தாவா சொத்து உள்ளது என்றால் இல்லை. திருவேங்கட செட்டியார் கட்டுப்பாட்டில் உள்ளது.

**(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam.